<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.63/2022</u>

**2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி.S. இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நைனாமலை | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : ராமசாமி | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : மலையாளப்பட்டி | வயது | : 77/2024 |

**முதல் விசாரணை :**

1(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 05.02.1990 ம் தேதியிட்டு தாவா சொத்தை நல்லெென்ன கவுண்டர் என்பவர் எனக்கு கிரையம் செய்து கொடுத்த கிரையபத்திரத்தின் இணையதளம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கான 01.01.1980 முதல் 31.01.2002 வரையிலான இணையதளம் மூலம் பெறப்பட்ட வில்லங்க சான்றிதழின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) வேப்பந்தட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.106/1990–ற்குரிய 01.05.1989 முதல் 23.05.2002 வரையிலான கணினி மூலம் பெறப்பட்ட வில்லங்க சான்றிதழின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தின் பாதையை விளக்க மாதிரி வரைபடம் ஒன்றை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 26.04.2022 ம் தேதியிட்டு எனது மகன் 4 முதல் 16 பிரதிவாதிகளுக்கு எதிராக அரும்பாவூர் காவல் நிலையத்தில் கொடுத்த ஆன்லைன் புகாரின் கைகாப்பி நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி புகாரை ஆன்லைனில் கொடுத்ததற்கான CCTNS இணையதள முகவரியில் பெறப்பட்ட புகாரின் Status report ன் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா பாதையை மறித்துள்ளதை காட்டக்கூடிய புகைப்படங்களை (7

எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது (7 எண்ணிக்கை) **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வாதி தரப்பில் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.